# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.STC.587/2018 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | .ம.சா.3 |
| Name | : | . Ashish Jaiswal |
| Father's Name | : | . Rajendra prasad Jaiswal |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . Branch Manager Indian Bank, Kilkodungalur Branch |
| Religion | : | இந்து |
| Age | : | .45 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 20.11.2025.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் இந்தியன் வங்கியில் கீழ்கொடுங்காலூர் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.3 ஆவணமானது அது ராதாகிருஷ்ணன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட காசோலை எண். 578632 ரூ.5 லட்சம். 14.05.2018 தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை ஆகும். ம.த.சா.ஆ.4 ஆவணமானது அது ராதாகிருஷ்ணன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட காசோலை எண். 578633 ரூ.5 லட்சம். 16.05.2018 தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை ஆகும்.

மேற்படி இரண்டு காசோலைகளும் பிரின்ஸ் விஜயராஜன் என்பவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது. காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை 20.06.2018 தேதி அன்று ராதாகிருஷ்ணனுக்கு தெரிவிக்கப்பட்டது. ம.த.சா.ஆ.3 மற்றும் ம.த.சா.ஆ.4 ஆவணங்கள் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை தேதி 19.06.2018 ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்க விசாரணை.**

என்னிடம் எதிரியின் வங்கி கணக்கும் மற்றும் புகார்தாரரின் வங்கி கணக்கு குறிப்புகள் உள்ளதா என்றால் எதிரியின் வங்கி கணக்கின் குறிப்பு மட்டும்தான் உள்ளது. எங்கள் வங்கியில் எதிரி மட்டும்தான் கணக்கு வைத்துள்ளார். எங்கள் வங்கியில் திருப்பப்பட்ட குறிப்பாணையின் எதிரியின் வங்கி கணக்கு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்நிலையில் எவ்வாறு எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லையென்று திருப்பப்பட்டது என்றால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லையென்று பரிசீலித்து திருப்பப்பட்டது. பொதுவாக ஒரு வங்கி கணக்கில் போதிய பணம் இல்லையென்றால் அவருக்கு அபராதம் விதிக்கப்படுமா என்றால் விதிக்கப்படும். ஆனால் இவ்வழக்கினை பொறுத்து சற்று அறிக்கையினை பரிசீலித்துதான் சொல்லமுடியும். காசோலை தேதிக்கும், காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை தேதிக்கும் மாற்றம் உள்ளது என்றால் காசோலை வங்கியில் பணம் இல்லையென்று தெரிந்தவுடன் காசோலை திருப்பப்படும். அதன் பின்னிட்டு அதற்கான குறிப்பாணை மனுதாரர் வசம் கொடுக்கப்பட்டது. எதிரியின் காசோலையானது சென்னை சைதாபேட்டை இந்தியன் வங்கி கிளைக்கு உரியதாகும். சைதாபேட்டை வங்கி கணக்கின் பட்டியல் உள்ளதா என்றால் உள்ளது. காசோலை திருப்பப்பட்டபோது சைதாபேட்டை வங்கி கிளை கணக்கு பட்டியல் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மனுதாரரின் வங்கி கணக்கில் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேல் பணம் பரிவர்த்தனை ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்றால் மனுதாரரின் வங்கி கணக்கை நான் பரிசீலிக்கவில்லை. மனுதாரருக்குஎங்கள் வங்கியில் கணக்கு ஏதும் இல்லாமல் எவ்வாறு காசோலை தாக்கல் செய்தார் என்றால் நான் தற்போதுதான் இவ்வழக்கு சம்மந்தமான ஆவணங்களை நேற்றுதான் சம்மன் கிடைத்து பரிசீலித்தேன் இவ்வழக்கு பணம் பரிவர்த்தனை நடந்து 8 ஆண்டுகள் ஆவதால் என்னால் சொல்ல இயலவில்லை. சம்மன் கிடைத்த பிறகு மனுதாரர் மற்றும் எதிரியின் வங்கி கணக்கை பரிசீலித்தேனா என்றால் பணம் பரிவர்தனை நடந்து 8 ஆண்டுகள் ஆவதால் எனக்கு வந்த சம்மனில் மனுதாரரின் வங்கி கணக்கின் விவரங்கள் இல்லாததால் என்னால் பரிசீலிக்க இயலவில்லை. என்னுடைய பேனல் வழக்கறிஞர் மன்னரசு மேற்படி காசோலைகளின் நகல்களை என்னிடம் கொடுத்தார். காசோலைக்கு காலவரையறை 3 மாதம் என்றால் சரிதான். எதிரியின் காசோலை எந்த ஆண்டுக்குறிய புத்தகம் என்றால் 2010ம் ஆண்டு அச்சிடப்பட்டதாகும். குறிப்பாக எந்த ஆண்டு காசோலை புத்தகம் எதிரிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சைதாபேட்டை வங்கி கிளைதான் எதிரிக்கு காசோலை புத்தகம் வழங்கியுள்ளது நாங்கள் வழங்கவில்லை. நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இருந்தது அதனை மறைத்து மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேனன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரும், எதிரியும் என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது சாட்சியம் போதிய விவரம் மற்றும் ஆவணங்கள் இல்லையென்பதால் அதை ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.